ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2299/46 - 2022 සැප්තැම්බර් මස 28 වැනි බදාදා - 2022.09.28
*2299/46 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்,**

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 27(1) மற்றும் (5) மற்றும் பிரிவுகள் 28(2) மற்றும் (3), பிரிவு 64(2) மற்றும் பிரிவு 70 உடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரம் ஆணைக்குழுவிடம் வினவி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளை.

**ரணில் விக்ரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
2022, செத்தெம்பர் 15.

**கட்டளை**

1. இந்தக் கட்டளை 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவு செய்தல், உரிமம் அதிகாரத்தைக் கையளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரத்துக்கான கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம்.

**பாகம் I**

**குறிப்பிட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள்**

2. சட்டத்தின் பிரிவு 26 இற்கு ஏற்ப, கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆளாகத் தகைமை பெறுவதற்கான உரிமம் ஒன்றைப் பெறுவதற்காக இதன் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டும் என்பதோடு அதனோடு குறித்த விண்ணப்பத்தில் அடையாளமிடப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1A - G 37667 — 08 (2022/09)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளாகத் தகைமை பெறுவதற்கும் மற்றும் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படுவதற்கும் உரிமம் ஒன்றைப் பெறுவதற்கான ஒரு விண்ணப்பமானது கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் மற்றும் அவ்விடத்திலிருந்து வணிகத்தில் ஈடுபடுவதற்கு முன்மொழிகின்ற நபரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. ஒரு விண்ணப்பம் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செலுத்த வேண்டிய கட்டணம், கட்டண கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

5. (அ) விண்ணப்பம் மற்றும் ஆதார ஆவணங்களை மதிப்பீடு செய்த பின்னர், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமத்தை வழங்குவதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொள்கை ரீதியாக அங்கீகாரத்தை வழங்கும் கடிதத்தை ஆணைக்குழுவினால் வழங்கப்படல் வேண்டும்.

(i) விண்ணப்பதாரர் ஏற்புடைய எழுத்துமூல சட்டங்களின் கீழ் அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கும் இணங்க வேண்டிய நிபந்தனை: மற்றும்

(ii) விண்ணப்பதாரர் ஒரு கம்பெனியாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில், பதிவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை விண்ணப்பதாரர் சட்டத்தின் பாகம் VII இன் கீழ் பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் விண்ணப்பதாரர் ஒரு கரைகடந்த வங்கி வணிகத்தில் ஈடுபடுபவராக இருந்தால், விண்ணப்பதாரர் உரிமத்தைப் பெற வேண்டிய சட்டத்தின் பாகம் VIII பிரிவின் கீழ் ஒரு நிபந்தனையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தின் பாகம் I இல் விண்ணப்பதாரர் வழங்கிய விவரங்களில் ஏதேனும் மாற்றம் ஒன்று ஏற்பட்டால், அதைச் சமர்ப்பித்த பின்னர் எந்த நேரத்திலும், விண்ணப்பதாரர் அத்தகைய மாற்றத்தை ஆணைக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டும், மேலும் திருத்தப்பட்ட விண்ணப்பம் ஒன்றை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரரை ஆணைக்குழு அனுமதிக்கலாம். அத்தகைய மீள் சமர்ப்பிப்பின் போது, ஆணைக்குழு விண்ணப்பத்தை மீள்-பரிசீலனை செய்யலாம் என்பதோடு தேவை எனக் கருதுகின்ற விடத்து கொள்கை ரீதியிலான ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஆணைக்குழு திருத்தலாம்.

(இ) (கட்டளை 5 (ஆ) இன் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் உட்பட) மேலே கட்டளை 5(ஆ)இன் கீழ் வழங்கப்பட்ட கொள்கை ரீதியிலான ஒப்புதல் கடிதம் மேலே அத்தகைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு செல்லுபடியாகும் மற்றும் அத்தகைய செல்லுபடியாகும் காலம் விதிவிலக்கான சூழ்நிலையில், மாத்திரமே எழுத்துப்பூர்வமாக ஆணைக்குழுவினால் நீடிக்கப்படலாம்.

(ஈ) கட்டளை 5(அ) பிரிவின் கீழ் கொள்கை ரீதியிலான ஒப்புதல் கடிதத்தை வழங்குவதன் மூலம் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் மற்றும் அவ்விடத்திலிருந்து வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விண்ணப்பதாரி உரித்துள்ள ஒருவராகக் கருதப்பட மாட்டாது.

(உ) கட்டளை 5(அ) பிரிவின் கீழ் கொள்கை ரீதியிலான ஒப்புதல் கடிதத்தை வழங்குவதன் மூலம், கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விண்ணப்பதாரியை ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஆளாக தகுதி பெறுவதற்கு உரிமம் ஒன்றை வழங்குவதற்கு ஆணைக்குழு கட்டுப்பட மாட்டாது.

(i) கொள்கை ரீதியிலான ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டவாறு நிறைவேற்றப்படாமல் இருத்தல், அல்லது

(ii) உரிமம் வழங்குவதற்கான சட்டத்தின் கீழ் உள்ள தேவைகளுக்கு விண்ணப்பதாரர் இணங்காமல் இருத்தல், அல்லது

(iii) உரிமம் ஒன்றிற்கான விண்ணப்பத்தில் உள்ள ஏதேனும் தகவல் அல்லது அது தொடர்பாக விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயம் பொய்யானதாக அல்லது பிழையானதாகக் கண்டறியப்படுதல்.

போன்ற சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு அத்தகைய கடிதத்தை மீளப்பெற்றுக் கொள்ளலாம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபராக விண்ணப்பதாரி தகுதி பெறுவதற்கு உரிமம் ஒன்றை வழங்குவதிலிருந்து ஆணைக்குழு தவிர்ந்திருக்கலாம்:

ஆயினும், எவ்வாறாயினும், விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட கொள்கை ரீதியிலான ஒப்புதல் கடிதத்தை திரும்பப் பெறுவதற்கு முன்னர் அல்லது உரிமம் வழங்குவதைத் தவிர்ப்பதற்கான முடிவை எடுப்பதற்கு முன்னர், அத்தகைய திரும்பப் பெறுதல் அல்லது முடிவெடுப்பதற்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு எழுத்துப்பூர்வமாக போதுமான அறிவித்தலை வழங்க வேண்டும் என்பதுடன் குறித்த விண்ணப்பதாரிக்கு ஆணைக்குழு பரிசீலனை செய்யும் பொருட்டு விடயங்களை முன்வைப்பதற்கும் மற்றும் மேலதிக ஆவணங்கள் அல்லது தகவல்கள் ஏதும் இருப்பின் அவற்றை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

(ஊ) ஆணைக்குழுவினால் (கட்டளை 5 (ஆ) என்பவற்றின் கீழ் செய்யப்பட்ட திருத்தங்கள் கட்டளை 5 (இ) இன் கீழ் கொள்கை ரீதியான அங்கீகாரக் கடிதத்தின் செல்லுபடியான காலத்தை நீடித்ததாக ஏதேனும் தொடர்பாடலின் பிரதியொன்று மற்றும் கட்டளை 5(உ) இன் கீழ் கொள்கை ரீதியிலான அங்கீகாரத்தை வழங்கும் கடிதத்தை நீக்கிக் கொண்டதான அறிவித்தலின் பிரதி உட்பட) கட்டளை 5(அ) இன் கீழ் வழங்கப்பட்ட கொள்கை ரீதியாக அங்கீகாரம் வழங்கும் கடிதத்தின் பிரதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி மற்றும் உரிய சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற வேண்டி இருப்பின் உரிய ஒழுங்குறுத்துகை அதிகார சபையிடமிருந்தும் ஏதேனும் ஏனைய ஆவணத்தை ஆணைக்குழு கோரலாம்.

6. கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில் விண்ணப்பதாரர் ஏதேனும் வணிகத்தில் ஈடுபடுவதற்கு, அதில் முதலீடு செய்வதற்கு, அதில் வசிப்பதற்கு அல்லது தொழிலில் ஈடுபடுவதற்கு, ஏற்புடைய எழுத்து மூல சட்டங்களின் அடிப்படையில் ஒரு ஒழுங்குறுத்துகை அதிகார சபையிடமிருந்து ஒழுங்குறுத்துகை பதிவு, உரிமம், அங்கீகாரம் அத்துடன்/அல்லது ஏனைய ஒப்புதலை விண்ணப்பதாரி பெற வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், ஏற்புடைய எழுத்து மூல சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, தேவைப்படுகின்ற ஆதரவளிக்கின்ற ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய பதிவு, உரிமம், அங்கீகாரம் மற்றும்/அல்லது ஏனைய ஒப்புதலுக்கான பொருத்தமான விண்ணப்பத்தை /விண்ணப்பங்களை மற்றும் ஏற்புடைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகளையும் ஒற்றைச் சாளர முதலீட்டு வசதியாளரான ஆணைக்குழுவுக்கு விண்ணப்பதாரி சமர்ப்பிக்க வேண்டும், கட்டளை 5(ஊ) பிரிவின் அடிப்படையில் பிரதான ஒப்புதல் கடிதத்துடன் விண்ணப்பத்தை /விண்ணப்பங்களை ஆணைக்குழு, அதன் ஒப்புதல்/ தீர்மானத்திற்காக சம்பந்தப்பட்ட ஒழுங்குறுத்துகை அதிகார சபைக்கு அனுப்புதல் வேண்டும்.

7. விடயத்திற்கு ஏற்ப, விண்ணப்பதாரிக்காக அல்லது விண்ணப்பதாரி சார்பில் உரிய ஒழுங்குறுத்துகை அதிகார சபையிடமிருந்து அல்லது விண்ணப்பதாரியிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஒழுங்குறுத்துகை பதிவுகள், உரிமங்கள், அங்கீகாரங்கள் மற்றும் ஏனைய தேவையான ஒப்புதல்களின் பிரதிகளை ஆணைக்குழு வைத்திருத்தல் வேண்டும்.

8. (அ) ஏற்புடைய சகல எழுத்துமூல சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் அனைத்து சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டதாகவும் மற்றும் கொள்கை ரீதியான ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தின் போது பிரதான அங்கீகாரக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டதாகவும் ஆணைக்குழு திருப்தி அடைகின்றவிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக தகுதியுடைய விண்ணப்பதாரருக்கு ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றிற்கு அமைவாக, கொழும்பு முறைமுக நகர அதிகார இடப்பரப்பில் மற்றும் அவ்வடத்திலிருந்து வணிகத்தில் ஈடுபடுவதற்கு ஆணைக்குழு விண்ணப்பதாரருக்கு உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(ஆ) கட்டளை 8(அ) பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற உரிமம், அது வழங்கப்பட்ட தினத்திலிருந்து பன்னிரண்டு (12) மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

(இ) மேலே உள்ள கட்டளை 8(அ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் :

(i) ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட உரிம இலக்கம்:
(ii) உரிமதாரரின் பெயர்:
(iii) உரிமதாரரின் சட்ட அமைப்பு:
(iv) உரிமதாரருக்குரிய வதிவிட நாட்டின், குடியுரிமையின், கூட்டிணைக்கபட்ட, பதிவு செய்த அல்லது கூட்டிணைக்கப்பட்ட முகவரி மற்றும் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிற்குள் உள்ள முகவரி அல்லது சட்டத்தின் 64வது பிரிவின்படி முகவரி:
(v) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் ஈடுபடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட வணிகம்:
(vi) உரிமம் வழங்கப்பட்ட திகதி:

(vii) அத்தகைய உரிமம் வழங்கப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:
திட்டவட்டமாகக் குறிப்பிடல் வேண்டும் என்பதுடன் அது
(viii) அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டும்.

(ஈ) உரிமம் வழங்கப்பட்டவுடன், ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 32 இன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நபருடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்து பிரிவு 28(4) இன் படி ஆணைக்குழுவால் பராமரிக்கப்படுகின்ற ஆவணத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் விபரங்களை உள்ளிட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வணிகமானது, அது தொடர்பில் வெளியிடப்பட்ட சட்டம் மற்றும் கட்டளை என்பவற்றின் நியதிகளுக்கு ஏற்ப மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகமாக அடையாளம் காணப்பட்டால், சட்டத்தின் 53(3) பிரிவின்படி கட்டளையானது அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னரே சொல்லப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும்.

## பாகம் II
## பொது நிபந்தனைகள்

*பதிவேடு*

9. அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் விவரங்கள் அடங்கிய பதிவேடு ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு பொதுமக்களுக்கு அணுகக்கூடியதாக இருக்க வேண்டும்.

10 விண்ணப்பத்தை சமர்ப்பித்து கட்டண ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தும் போது, எவரேனும் குறிப்பிட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தொடர்பாகவும் பொது மக்கள் அணுகக் கூடிய பதிவேட்டில் பராமரிக்கப்படும் தகவலின் பிரித்தெடுப்பொன்றை ஆணைக்குழு வழங்க வேண்டும். வழங்கப்படுகின்ற தகவல்களின் அத்தகைய பிரித்தெடுப்பானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான முதன்மையான சான்றாக இருக்கும்.

11. விண்ணப்பத்தை சமர்ப்பித்து கட்டண விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தியவுடன், ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் உரிமம், பதிவுச் சான்றிதழ், அங்கீகாரம் அல்லது ஏனைய ஒப்புதலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை ஆணைக்குழுவினால், சமர்ப்பிக்க வேண்டும். உரிமம், பதிவுச் சான்றிதழ், அங்கீகாரம் அல்லது ஏனைய ஒப்புதலின் அத்தகைய சான்றளிக்கப்பட்ட பிரதி அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் உரிமம், பதிவு, அங்கீகாரம் அல்லது ஒப்புதல் ஆகியவற்றின் தீர்மானமிக்க சான்றாக இருக்கும்.

*கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிற்குள் உள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அலுவலகம்*

12. இதன் பாகம் III இல் உள்ள கட்டளைக்கு அமைவாக, அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அலுவலகம் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் உள்ள ஒரு இடமாக இருக்க வேண்டும், மேலும் அத்தகைய அலுவலகம் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கான அனைத்து தகவல் தொடர்புகள் மற்றும் அறிவித்தல்கள் முகவரியிடப்படும் முகவரியாகும். அலுவலகத்தின் முகவரியில் ஏதேனும் மாற்றம் இருந்தால், கட்டளை 15ன் படி ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

*தகவல் தொடர்பு விவரங்கள்*

13. அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர், அவரின் அலுவலகத்தின் முகவரி, உரிமத்தின்/உரிமங்களின் இலக்கம், பதிவுச் சான்றிதழ் (ஏதேனும் இருந்தால்) மற்றும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவரின் பெயர் ஆகியவை அதன் அனைத்து தொடர்பாடல்களிலும் தெளிவான எழுத்துக்களில் குறிப்பிடல் வேண்டும்.

14. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர் தனது தகவல்தொடர்புகளில் தவறாக வழிநடத்தும் அல்லது ஏமாற்றும் தகவலைச் சேர்க்கக்கூடாது.

*அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக இருப்பதன் அடிப்படையில் விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை மாற்றுதல் அல்லது திருத்துதல் பின்வருமாறு இருக்க வேண்டும்:*

15. (அ) சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதேனும் மாற்றம் அல்லது திருத்தம் ஏற்பட்டால், அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் ஏற்படுத்தப்பட்ட முப்பது (30) நாட்களுக்குள் அத்தகைய மாற்றம் அல்லது மாற்றத்திற்கு ஆதாரமாக தேவையான ஆவணங்களுடன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அத்தகைய மாற்றம் அல்லது திருத்தத்தை அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எழுத்துப்பூர்வமாக ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) மேலே உள்ள கட்டளை 15(அ) பிரிவின் அடிப்படையில் அறிவித்தல் கிடைத்தவுடன், ஆணைக்குழு கட்டண ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி, பதிவேட்டில் தேவையான மாற்றங்களைச் செய்து, அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் புதிய விபரங்களுடன் தேவைப்பட்டால், மேலே உள்ள கட்டளை 8 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை மீண்டும் வழங்க வேண்டும். தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக மாற்றம் அல்லது திருத்தத்தின் விளைவை மதிப்பிடுவதன் மூலம் ஆணைக்குழு அவசியமானதாகக் கருதினால், பரஸ்பர உடன்படிக்கையின் மூலம் ஆணைக்குழுவுக்கும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கும் இடையேயான உடன்படிக்கையின் எவையேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை திருத்தலாம்.

(இ) ஒரு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு மாற்றம் அல்லது திருத்தத்திற்கான அறிவித்தலை, ஆணைக்குழு அவசியமாகக் கருதினால், சம்பந்தப்பட்ட ஒழுங்குறுத்துகை அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

*நிதி கூற்றுக்ககள் மற்றும் கணக்கியல் பதிவுகள்*

16. (அ) மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஒவ்வொரு பன்னிரண்டு (12) மாதங்களுக்கு அல்லது உரிய சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு மற்றும் ஏனைய ஒழுங்குறுத்துகை அதிகாரசபையுடன் ஒப்புக் கொள்ளக்கூடிய ஏனைய பன்னிரெண்டு (12) மாத காலத்திற்காக கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் மற்றும் அவ்விடத்திலிருந்து மேற்கொள்ளப்படும் வணிகத்தின் இலாபம் மற்றும் வருமானத்தின் பகுதியை தனித்தனியாக அடையாளம் காண ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளும் நிதி அறிக்கைகளை பராமரித்து தயாரிக்க வேண்டும். நிதிநிலைமை அறிக்கைகள் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் தயாரிக்கப்பட்டு, ஒரு கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவரால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டு, மார்ச் 31 முதல் அல்லது உரியவாறு ஏனைய பன்னிரெண்டு (12) மாத காலங்கள் முடிவின் பின்னர் ஆறு (6) மாதங்களுக்குள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளும்:

(i) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் கொடுக்கல் வாங்கல்களை சரியாகப் பதிவு செய்து விளக்கக் கூடியதாகவும்,

(ii) எந்த நேரத்திலும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் நிதி நிலைமையை நியாயமான துல்லியத்துடன் தீர்மானிக்கக் கூடியதாகவும்,

(iii) அதன் அலுவலர்கள் அல்லது முகாமையாளர்கள் நிதிநிலைமை அறிக்கைகளை உடனடியாகவும் முறையாகவும் கணக்காய்வு செய்ய இயலுமான முறையிலும்

கணக்கு பதிவுகளை பராமரிக்க வேண்டும்:

(இ) கணக்கியல் பதிவுகள்:

(i) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் உள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும்:
(ii) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் அவை உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து குறைந்தது பத்து (10) ஆண்டுகள் பாதுகாக்கப்பட வேண்டும்: மற்றும்
(iii) அனைத்து நியாயமான நேரங்களிலும் ஒரு கணக்காய்வாளர் மற்றும் ஆணைக்குழு மூலம் ஆய்வுக்கு திறந்ததாக இருக்க வேண்டும்.

*வருடாந்த விபர அறிக்கை*

17. அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட ஆளும் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஒவ்வொரு பன்னிரண்டு (12) மாத காலத்தின் முடிவிலும் அல்லது ஆணைக்குழுவுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட ஏனைய பன்னிரண்டு (12) மாத கால முடிவில் மேலே கட்டளை 16 இற்கு ஏற்ப நிதிக்கூற்றுக்களின் அங்கீகாரத்திலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் இதன் அட்டவணை IV இல் விபரிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி உரிய படிவத்தில் வருடாந்த வருமானத்தை ஆணைக்குழுவுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**பாகம் III**
**பிரிவு 64 இன் கீழ் இடைக்கால ஏற்பாடுகள்**

18. கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிற்கு வெளியே இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பெயர் குறிப்பிட்ட இடத்தில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளை அனுமதிக்கும் போது, அரசாங்கத்தின் சந்தைப்படுத்தக்கூடிய குத்தகையில் மேற்கொள்ளப்படவுள்ள முன்மொழியப்பட்ட காணியில் அல்லது கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் கருத்திட்ட கம்பெனி சந்தைப்படுத்தக் கூடிய காணியில் அல்லது அதில் அமைந்துள்ள கூட்டாட்சியாதன காணித்துண்டங்களில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் அல்லது கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டாட்சியாதன காணித்துண்டங்களில் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் பெறுதல் தொடர்பிலான முதலீட்டில் கரிசனை கொள்ள வேண்டும்.

19. இந்த பாகம் III இன் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அனுமதி எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும் என்பதோடு கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிற்கு வெளியில் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் மற்றும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிதித் தகவல்களை வழங்குதல் மற்றும் அறிக்கையிடல் போன்ற விடயங்கள் பற்றிய நிபந்தனைகள் அதில் உள்ளடக்கியிருக்கலாம்.

20. அனுமதிக்கப்பட்ட காலத்திற்காக, கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தின் முகவரியானது, கட்டளை 12ன் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கான அனைத்து தகவல் தொடர்புகளும் அறிவித்தல்களும் முகவரியிடப்படும் முகவரியாக இருக்கும்.

## பாகம் IV
## உரிமங்களின் பதிவுகள், அதிகாரத்தைக் கையளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரங்களின் காலத்தை நீடித்தல்.

21. (அ) கீழே உள்ள கட்டளை 21(இ) இற்கு அமைவாக, விண்ணப்பதாரரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்தி உரிமம் பெற விரும்பும் ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளும் மற்றும் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் வணிகத்தில் ஈடுபட அனுமதித்தலைப் புதுப்பிப்பதற்கு, உரிமம் காலாவதியாகும் முப்பது (30) நாட்களுக்கு முன்னர் ஆணைக்குழுவிடம் அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்ய வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர், ஏற்புடைய சட்டத்தால் வேண்டப்படக் கூடிய ஏதேனும் ஏனைய பதிவு, உரிமம், அங்கீகாரம் மற்றும்/ அல்லது ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்புடைய சட்டத்தால் விபரிக்கப்பட்ட படிவத்தில், ஏற்புடைய விண்ணப்பத்தை/விண்ணப்பங்களை தேவையான ஆதரிக்கின்ற ஆவணங்களுடன் சேர்த்து மற்றும் ஏற்புடைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பவற்றையும் செலுத்தி ஒற்றைச் சாளர முதலீட்டு வசதியாளர் என்ற வகையில் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) உரிமம் பெற்ற ஆளை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்தும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்காக தாமதமான விண்ணப்பம் பின்வருமாறு

(i) அதன் காலாவதி திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் வழங்கப்பட்டால், உரிமம் தொடர்ந்ததாகக் கருதப்படும் மற்றும் அபராதம் விதிக்கப்பட மாட்டாது : அல்லது

(ii) அதன் காலாவதி திகதியின் முப்பது (30) நாட்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டால், உரிமம் தொடர்ந்ததாகக் கருதப்படும் மற்றும் கட்டளை 32 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபராதம் விதிக்கப்படும்.

22. உரிமம் பெற்றவர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக தகுதிபெறும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணபத்தை சமர்ப்பிக்கும் போது, உரிமம் பெற்றவர் ஆணைக்குழுவிடம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்:

(அ) வருடாந்த விபர அறிக்கையில் உள்ள அனைத்து தகவல்களும் உண்மையாகவும் சரியாகவும் இருக்கின்ற வருடாந்த விபர அறிக்கையை சமர்ப்பணம் செய்த பின்னர் கட்டளை 15 இன் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்டால், அத்தகைய மாற்றங்கள் ஆணைக்குழுவிற்கு முறையாக அறிவிக்கப்பட்டுள்ளன எனவும்:

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அவரின் வதிவிடம், குடியுரிமை, கூட்டிணைத்தல், பதிவு செய்தல் அல்லது உருவாக்கம் ஆகியவற்றில் ஏற்புடைய சட்டத்தின்படி சகல சந்தர்ப்பங்களிலும் கடன்தீர் திறனுடையவராக இருக்க வேண்டும் மற்றும் பொருந்தக்கூடிய கடன் தீர்க்க முடியாத அல்லது வங்குரோத்து நிலை அல்லது ஏனைய பொருந்தக்கூடிய சட்டத்தின்படி எந்த சட்டரீதியான நடவடிக்கைகளுக்கும் உட்படவில்லை என்றும் மற்றும்

(உ) (ஒழுங்குறுத்துகை அல்லது ஏனைய) அனைத்து சட்டங்களுக்கும் மற்றும் அதற்கு ஏற்புடைய அனைத்து உரிம நிபந்தனைகளுக்கும் உரிமம் பெற்றவர் இணங்குகின்றார் எனவும்

மேற்கொள்ளப்படலாம்:

23. புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் மற்றும் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தல் அறிக்கையைப் பெற்றவுடன், பணிப்பாளர் தலைமை அதிபதியின் பரிந்துரையின் பேரில் மற்றும் கட்டண ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணத்தைச் செலுத்தியவுடன் கட்டண விதிமுறைகளின் கீழ் தேவைப்படுகின்ற உரிமம் பெற்ற ஆளை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக தகுதிப்படுத்தும் புதுப்பிக்கப்பட்ட உரிமத்தை ஆணைக்குழு வழங்கும்.

24. உரிமம் பெற்ற ஆளொருவரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிபெறும் வகையில் வழங்கப்பட்ட உரிமத்தை இந்தப் பாகம் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் காலாவதியாகும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து (45) நாட்களுக்குள் புதுப்பிக்கத் தவறினால், உரிமம் காலாவதியான திகதியிலிருந்து, கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான அத்தகைய அங்கீகாரம் முடிவுறுத்தப்படும்.

## பாகம் V
## உரிமத்தை கைமாற்றம் செய்தல் மற்றும் சாட்டுதல் செய்தல்

25. அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக தகுதிபெற வழங்கப்பட்ட உரிமம் கைமாற்றம் செய்தலாகாது மற்றும் வேறு எந்த தரப்பினருக்கும் சாட்டுதல் செய்தலுமாகாது.

## பாகம் VI
## உரிமத்தை கைவிடல், இடைநிறுத்துதல், மீளப் பெறுதல் மற்றும் இரத்து செய்தல்

26. உரிமத்தைக் கைவிடல்

(அ) இந்த கட்டளை 26 இன் தேவைகளுக்கு இணங்க, அந்த உரிமத்தை கைவிடுவதற்கு விண்ணப்பம் செய்தால், உரிமம் பெற்ற ஆளை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்தும் வகையில் வழங்கப்பட்ட உரிமத்தை ஆணைக்குழு இரத்து செய்யலாம்.

(ஆ) விண்ணப்பம்:

i. அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் சார்பாக அவரின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவரால் செய்யப்பட வேண்டும் மற்றும்

ii. அட்டவணை VI இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டும்.

(இ)

i. அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் :கடந்த மூன்று (3) மாதங்களில் எந்த சந்தப்பத்திலும்,

அ. பெயரை மாற்றியிருப்பின்

ஆ. வர்த்தகம் செய்தல் அல்லது வேறுவிதமாக வியாபாரத்தை மேற்கொண்டிருப்பின்

இ. அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் விவகாரங்களை முடிவுறுத்துவதற்கு அல்லது தொடர்புடைய சட்டத் தேவைக்கு இணங்குவதற்கு, கட்டளை 26-ன் கீழ் விண்ணப்பம் செய்கின்ற நோக்கங்களுக்காக தேவையான அல்லது தகுந்தவை தவிர, வேறு எந்தச் செயலிலும் ஈடுபட்டிருப்பின் அல்லது

ii. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அவரின் சொத்து தொடர்பான எந்தவொரு செயல்முறையும் பொருந்தக்கூடிய கடன் தீர்க்க முடியாதநிலை அல்லது வங்குரோத்து நிலை அல்லது ஏனைய ஏற்புடைய சட்டத்தின்படி குறிப்பிட்ட நேரத்தில் ஏதேனும் செயன்முறையைத் தொடங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில்.

இந்த கட்டளை 26ன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு விண்ணப்பம் செய்வதற்கு உரிமை இல்லை:

(ஈ) கட்டளை 26(ஆ) பிரிவின் கீழ் ஒரு விண்ணப்பம் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வழங்குவதன் மூலம் திரும்பப் பெறப்படலாம்.

(உ) (i.) ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (ii) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய வர்த்தமானிகளில் (iii) அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்யும் அதிகாரத்தைப் பிரயோகித்து பதிவுத் தபாலில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயரை பதிவழிக்க முடியும் என அறிவிக்கலாம் எனவும், ஆணைக்குழு ஏன் அவ்வாறு செய்யக் கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு கோரும் அறிவித்தலை இலங்கையில் வெளிவரும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ் ஒன்றில் பிரசுரித்து மூன்று (3) மாதங்கள் முடிவடையும் வரை இந்த கட்டளையின் 26 இன் கீழ் உரிமத்தை ஆணைக்குழு இரத்துச் செய்யக்கூடாது.

இரத்துச்செய்தல்

27. (அ) பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்று நிகழ்ந்தால், அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் போதுமானவாறு தவிர்ந்து கொண்டமை அல்லது மீறலாகக் கருதப்படும்:

(i) உரிமதாரரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்துகின்ற உரிமம் வழங்கப்பட்ட ஆறு (6) மாதங்களுக்குள் வியாபாரத்தைத் தொடங்கத் தவறுதல்,

(ii) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அவரின் கடன்களை செலுத்த இயலாமை உட்பட ஏதேனும் காரணத்திற்காக ஏற்புடைய கடன்தீர்க்க முடியாமை அல்லது வங்குரோத்து நிலை அல்லது ஏனைய ஏற்புடைய சட்டத்தின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அவரின் ஆதனம் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கையைத் தொடர்வதன் காரணமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கடன்தீர்க்க முடியாதவர் அல்லது வங்குரோத்து நிலை அடைந்தவர் என தகுதியான நியாயாதிக்க நீதிமன்றம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப்படுதல்.

(iii) ஆதிகாரமளிக்கப்பட்ட இடம்/கள் அல்லது பகுதிக்குள் வியாபாரம் செய்வதை நிறுத்துதல்

(iv) ஒழுங்குறுத்துகை அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வணிக நடவடிக்கைகள் அல்லது செயல்பாடுகளைத் தொடரும் திறனை பாதிக்கும் ஏதேனும் பொருளளவலான ஒழுங்குறுத்துகை உரிமங்கள், பதிவுகள், அங்கீகாரங்கள் அல்லது ஏனைய ஒப்புதல்களை இரத்து செய்தல், அல்லது ஒரு வெளிநாட்டு ஒழுங்குறுத்துகை அதிகாரசபை அல்லது ஆளும் குழுவால் வழங்கப்பட்ட உரிமம், பதிவு, அங்கீகாரம் அல்லது ஏனைய ஒப்புதல் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விடத்து, அத்தகைய உரிமத்தை, பதிவை, அங்கீகாரத்தை அல்லது ஏனைய ஒப்புதலை வெளிநாட்டு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு அல்லது ஆளும் குழுவால் இரத்து செய்தல்.

(v) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஏற்புடைய சட்டத்தின் அடிப்படையில் ஒரு சட்ட ஆள் என்ற நிலைமையிலிருந்து நிறுத்தப்படுதல்

(vi) அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் விவரங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருந்தால், அது உரிமம் வழங்கப்பட்ட விபரங்களுடன் இணங்காததாக அல்லது முரண்படுகின்றதாக ஆணைக்குழு கருதுதுல்.

(vii) ஏற்புடையவாறு, வருடாந்தக் கட்டணங்கள், புதுப்பித்தல் கட்டணங்கள், தண்டனை அல்லது தண்டப்பணங்கள் ஆகியவற்றைச் செலுத்தத் தவறியது உட்பட சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகள் அல்லது சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, சட்டவிதிகள், வழிகாட்டுதல், உத்தரவு அல்லது ஏனைய தேவைகளை மீறுதல்.

(viii) ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறுதல்.

(ix) சட்டத்தின் பிரிவு 32 இன் அடிப்படையில் ஆணைக்குழுவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறுதல்.

(x) உரிமம், பதிவு, அதிகாரத்தை வழங்குதல் அல்லது அங்கீகாரத்துக்கான விண்ணப்பம் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு பொய்யான, தவறாக வழிநடத்தக் கூடிய அல்லது தவறான தகவல்கள் அல்லது ஆவணங்களை வழங்குதல், அல்லது

(xi) ஆணைக்குழுவின் கருத்தின்படி கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில் நலன்கள், தேசிய நலன் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றின் நலன்களுக்கு பாதகமாக அமையும் வகையில் வியாபாரத்தை முன்னெடுத்தல்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆள், கட்டளை 27(அ)(i),(ii),(iii),(iv), (v) மற்றும் (vi) ஆகிய பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று நடந்தால், அத்தகைய நிகழ்வை எழுத்து மூலமாக ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

28. (அ) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர், மேலுள்ள 27(ஆ) நியதியின்படி, ஒரு குறிப்பிடத்தக்க தவிர்ப்பை அல்லது மீறலை புரிகின்றார் அல்லது குறிப்பிடத்தக்க தவிர்ப்பை அல்லது மீறல் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவித்தால், ஆணைக்குழுவானது, பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில் எழுத்துபூர்வமாக அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்வதற்கான அதன் எண்ணத்தை அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தேசித்துள்ள உரிமத்தை இரத்துச் செய்தல் குறித்த அறிவித்தலுக்கு எதிராக, அதிகாரம் பெற்ற ஆள், அத்தகைய அறிவித்தல் கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள், உரிமம் ஏன் இரத்துச் செய்யப்படக் கூடாது என்பதற்கான காரணங்களைத் தெரிவித்து, 28(அ) நியதியின் கீழ் ஆணைக்குழுவிற்கு எழுத்துபூர்வமாக ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம்.

(இ) ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால் அவற்றை பரிசீலித்து, அதன் ஆட்சேபனைகளுக்கு ஆதரவாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளை விசாரித்த பின்னர், கட்டளை 28(ஆ) பிரிவின் கீழ் ஆட்சேபனைகளை வழங்குவதற்கான கடைசி திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் ஒரு நடவடிக்கை முறைக்கு ஏற்ப, 28(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலை நிபந்தனைகளுடன் அல்லது இல்லாமல் திரும்பப் பெறலாம் அல்லது உரிமம் பெற்றவரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்தும் வகையில் வழங்கப்பட்ட உரிமத்தை இரத்துச் செய்யலாம் என்பதோடு அதற்கேற்ப எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு அறிவிக்க வேண்டும். இதன் நியதிகளில் இரத்து செய்யப்பட்டதற்கான அறிவித்தல் ஆணைக்குழுவால் அனைத்து தொடர்புடைய ஒழுங்குறுத்துகை அதிகார சபைகளுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இந்த கட்டளை 28 இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் உரிமத்தை இரத்து செய்வது, கட்டளை 28(இ) இன் அடிப்படையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(உ) கட்டளை 28(ஈ) இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் உரிமம் இரத்துசெய்யப்பட்டால், ஆணைக்குழு, கூடிய விரைவில் (i) ஆணைக்குழுவின் இணையத்தளத்தில், (ii) சிங்களம், தமிழில் மற்றும் ஆங்கில மொழிகளில் வர்த்தமானியில் மற்றும் (iii) இலங்கையில் வெளிவரும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியிட வேண்டும்.

29. கட்டளை 28(இ) பிரிவின் கீழ் ஆணைக்குழுவால் உரிமத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டால், ஆணைக்குழு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம் -

(அ) அத்தகைய வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்ட எந்த விதத்திலும் அதன் சொத்துக்களைக் கையாள்வதிலிருந்து அல்லது அகற்றுவதைத் தடை செய்தல்

(ஆ) அவ்வாறு குறிப்பிடப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல் தொடரிலும் நுழைவதைத் தடை செய்தல் அல்லது

(இ) இரத்துச் செய்தல் அறிவித்தல் வெளியான நாளிலிருந்து எதிர்கால வணிகத்தைக் கோருவதைத் தடை செய்தல்.

.

பணிப்பை விடுக்க முடியும்
பதிவு இடாப்பிலிருந்து நீக்குதல்

30. (அ) உரிமம் பெற்ற ஆளொருவரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்தும் வகையில் வழங்கப்பட்ட உரிமம், இந்த கட்டளையின் பாகம் IV இன் அடிப்படையில் புதுப்பிக்கப்படாவிட்டால் அல்லது 26 அல்லது 28 வது கட்டளையின் கீழ் உரிமம் பெற்ற ஆளொருவரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகுதிப்படுத்தி வழங்கப்பட்ட உரிமத்தை ஆணைக்குழு இரத்துச் செய்தால், அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கும் ஆணைக்குழுவுக்கும் இடையிலான ஏவையேனும் மற்றும் அனைத்து உடன்படிக்கைகளும் (ஏதேனும் குத்தகை உடன்படிக்கை உட்பட) முடிவுறுத்தப்படும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் ஆணைக்குழுவால் பராமரிக்கப்படும் பதிவு இடாப்பலிருந்து நீக்கப்படும். உடன்படிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள் மற்றும் அவ்விடத்திலிருந்து வியாபாரத்தை மேற்கொள்வதற்குத் தகுதி பெறுவதிலிந்து நிறுத்தப்படுவார்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டாலும், அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அனைத்து உரிமைக்கோரிக்கைகள், கடன்கள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் மற்றும் ஒவ்வொரு நிறுவுனர், உறுப்பினர், பங்காளர், பணிப்பாளர் மற்றும் பங்குதாரர் ஆகியோரின் பொறுப்புகளுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் பொறுப்பேற்க வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தொடர்ந்து உரிமம் பெற்றவர் போல் மற்றும் ஆணைக்குழுவால் ஒழுங்குறுத்தப்படுவதைப் போல் செயல்படுத்தப்படலாம்.

(இ) மேலே உள்ள கட்டளை 30(ஆ) பிரிவின் பொதுத்தன்மை எவ்வாறு இருந்தபோதிலும், அதிகாரமளிக்கப்பட்ட ஆள் பதிவு இடாப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலும், சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்கள், உரிமக் கட்டணம் மற்றும் அபராதங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டும் மற்றும் அத்தகைய கட்டணங்கள், உரிமக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் சொத்துக்களுக்கு எதிரான ஏனைய அனைத்து உரிமைகோரிக்கைகளை விடவும் முன்னுரிமை அளிக்கப்படுவதாக இருத்தல் வேண்டும்.

## பாகம் VII
## மிகைக் கட்டணம் மற்றும் அபராதங்கள்

31\. (அ) அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர், குறிப்பிட்ட காலத்திற்குள் உரிமதாரரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக அங்கீகரிக்கும் உரிமத்தை புதுப்பிக்கத் தவறினால், அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் ஏதேனும் விண்ணப்பம், கணக்கு, கூற்று, ஆவணம் அல்லது வருமான அறிக்கை அல்லது அறிவித்தலை சமர்ப்பிக்கத் தவறினால், மற்றும் சட்டத்தின் கீழ் அத்தகைய குறைபாடு மூலம் ஒரு குற்றத்தைச் செய்திருந்தால், அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது எவரேனும் உறுப்பினருக்கு எதிராக அத்தகைய நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் தொடர்வதற்குப் பதிலாக அல்லது அத்தகைய நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு இருந்தால், ஆணைக்குழு பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில். அத்தகைய குற்றம் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு எதிராக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் எவரேனும் ஆளுகின்ற அங்கத்தவர் அல்லது முகாமை குழுவின் உறுப்பினருக்கு எதிராக அத்தகைய நடவடிக்கைமுறைகளைத் தொடர்வதற்குப் பதிலாக, சட்டத்தின் பிரிவு 68 மற்றும் 69 இன் அடிப்படையில், அதிகாரமளிக்கப்பட்ட ஆள் மீது அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் எவரேனும் ஆளுகின்ற அங்கத்தவர் அல்லது முகாமை குழுவின் உறுப்பினர் மீது குற்றத்தின் தன்மையைப் பொறுத்து ஆணைக்குழு பொருத்தமானதாகக் கருதுகின்ற அத்தகைய தொகைக்கு அபராதம் விதிக்கலாம். ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அத்தகைய எந்தவொரு அபராதமும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழு ஏதேனும் ஒரு குற்றத்தைப் புரிந்ததற்கு 31(அ) ஒழுங்குவிதியின் கீழ் அபராதமாக ஏதேனும் தொகையை ஏற்றுக்கொண்டால், அந்தக் குற்றத்தைப் பொறுத்தமட்டில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் எவரேனும் ஆளுகின்ற அங்கத்தவருக்கு அல்லது முகாமை குழுவின் உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அல்லது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், அதனைத் தொடரக்கூடாது.

(இ) கட்டளை 31(அ) நியதிகளின் கீழ் விதிக்கப்பட்ட அபராதம் செலுத்தப்படாமல் இருந்தால், சட்டத்தின் பிரிவு 70 இன் நியதிகள் ஏற்புடையதாகும்.

## பாகம் VIII
## படிவங்கள் மற்றும் அறிவித்தல்கள்

32\. (அ) சட்டத்தினால் மற்றும் ஆணைக்குழுவினால் விபரிக்கப்படுகின்ற இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஏதேனும் விண்ணப்பம், தகவல், கூற்று, ஆவணம் அல்லது வருமானம் அல்லது அறிவித்தல் என்பன படிவத்தில் உள்ளடங்கியுள்ள ஏவையேனும் வழிகாட்டுதல்கள், அறிவுறுத்தல்கள், கைநூல் அல்லது தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அல்லது ஆணைக்குழுவினால் தரப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதோடு ஆணைக்குழுவால் அவ்வப்போது பராமரிக்கப்படும் இலத்திரனியல் அணுகுதல் முறைமையைப் பயன்படுத்தி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகைய இலத்திரனியல் அணுகுதல் முறைமை இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படுகின்ற விசேட சூழ்நிலைகளில், ஆணைக்குழுவால் அறிவுறுத்தப்படுகின்றவாறு படிவத்தை கை முறையாக பூர்த்தி செய்யப்படலாம்.

(ஆ) ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற அத்தகைய விண்ணப்பம், தகவல், கூற்று, ஆவணம் அல்லது வருமானம் அல்லது ஏதேனும் விடயத்தின் அறிவித்தல்:

(i) இலத்திரனியல் வழிமுறைகள் உட்பட, கண்ணுக்குப் புலப்படக் கூடிய வடிவத்தில் மீண்டும் உருவாக்கப்படுவதற்குத் தெளிவாக இருக்க வேண்டும்

(ii) ஏற்புடைய இடத்தில், படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் அல்லது ஆட்களின் கையொப்பங்கள் மற்றும் படிவத்தில் கையொப்பமிடப்பட்ட திகதி ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்

(iii) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் மற்றும்

(iv) ஆணைக்குழுவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் வழங்கப்பட வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரதியை பத்து (10) ஆண்டுகளுக்கு வைத்திருக்க வேண்டும்.

(ஈ) சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின்படி ஒரு விண்ணப்பம், தகவல், கூற்று, ஆவணம் அல்லது அறிக்கை அல்லது அறிவித்தலை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்ற விடத்து, அத்தகைய விண்ணப்பம், தகவல், கூற்று, ஆவணம் அல்லது அறிக்கை அல்லது அறிவித்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், அவ்வாறு சமர்ப்பிப்பதற்கு சட்டம் அல்லது ஏனைய எழுதப்பட்ட சட்டம் அல்லது இந்த கட்டளையின் வேறு எங்கும் கால அவகாசம்

குறிப்பிடப்படாவிட்டால், அத்தகைய அறிவித்தல் தொடர்பான நிகழ்வு நடந்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் குறிப்பிட்ட சமர்ப்பிப்புகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## பாகம் IX
## பொருள்கோடல்

1 (அ) இந்த கட்டளையின் நோக்கத்திற்காக:

"சட்டம்" என்பது 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும் மற்றும்

"கட்டண ஒழுங்குவிதிகள்" என்பது, அவ்வப்போது திருத்தப்படுகின்ற 2022 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல் (கட்டண) ஒழுங்குவிதிகள் எனப்பொருள்படும்.

(ஆ) மேலே பொருள்கோடல் செய்யப்படாத மற்றும் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தில் பொருள்கோடப்பட்டுள்ள இந்த கட்டளையில் பயன்படுத்தப்படும் ஒரு பதம், 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க. கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ள அதே அர்த்தத்தையே இந்த கட்டளையிலும் கொண்டிருக்கும்.

(இ) இந்தக் கட்டளையில் உள்ள ஒரு ஏற்பாடு, "எழுத்துமூலத்தில்" உள்ள ஏனைய ஆவணத்தின் தகவல் தொடர்பு, அறிவித்தல், உடன்படிக்கையைக் குறிப்பீடு செய்தால், முரணான எண்ணத்தை தோற்றுவிக்காத வரை, அது தெளிவான வடிவில் இருப்பதாகவும் மற்றும் காகிதத்தில் மீண்டும் உருவாக்கக்கூடிய திறன் கொண்டதாகவும் அர்த்தப்படும். அத்தகைய வாசகம் தொடர்பான வெளிப்பாடுகள் அதற்கேற்ப பொருள்கோடல் செய்யப்படும்.

(ஈ) இந்த ஒழுங்குவிதிகளின் சிங்களம் மற்றும் தமிழ் வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள வாசகம் மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை I**

**கொழும்புத் துறைமுக நகர**
**அதிகார இடப்பரப்பில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான உரிமத்திற்கான விண்ணப்பம்**

*அறிவுறுத்தல்கள்:*

*(1)* *விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு இலத்திரனியல் முறைமை உருவாக்கும் வரை, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட வியாபாரம் தொடர்பான ஆவணச் சான்றுகள் ஆகியவை விண்ணப்பக் கட்டணத்துடன் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்:*

*(2)* *மேலும், விண்ணப்பதாரர்களினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும் மற்றும் ஆதார ஆவணங்களின் மென் பிரதியையும் (விண்ணப்பக் கட்டணம் செலுத்தியதற்கான உறுதிப்படுத்தும் ஆவணத்துடன்) மின்னஞ்சல் மூலம்* applications@portcity.gov.lk *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் அதிகாரிகளின் பூர்வாங்க மதிப்பாய்வுக்காக சமர்ப்பிக்க வேண்டும்.*

